# Indian Philosophy: A Summary

**S. Sivakamasundari**

*Assistant Professor in Tamil, Sri Sankara Arts & Science College (Autonomous)*
*Enathur, Kanchipuram, Tamil Nadu, India*

***Article History***

**Received:** 15.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.07.2024

**Corresponding Author**
S. Sivakamasundari

**Email Id:**
shivaniswetha@gmail.com

**Citation:**
Sivakamasundari, S. "Indian Philosophy: A Summary." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 16–27.

***Abstract***

*Indian philosophy, a product of the intellectual endeavors of Indian sages and thinkers, is deeply rooted in the Indian subcontinent. It is an integral part of Indian culture and has been shaped by a confluence of factors such as practical experiences, beliefs, customs, traditions, scientific inquiry, aesthetics, psychology, intellect, and metaphysical explorations. This rich tapestry of thought was woven not only by forest-dwelling ascetics but also by ideal householders engaged in worldly pursuits. The Indian subcontinent has been a hub of intellectual exchange, with knowledge flowing freely between its northern and southern regions. The term 'philosophy' signifies 'love of wisdom'. While the object of this 'love' varies across different philosophies, the core purpose remains the exploration of reality. Indian philosophy, therefore, is a repository of knowledge aimed at understanding the nature of existence. The Sanskrit term 'Darshan' and the Tamil terms 'Meyy porul' (true reality) and 'Samayakkanakku' (logical reasoning) are synonymous with philosophy in Indian context. The Tamil sage Thiruvalluvar emphasizes the primacy of philosophical inquiry in his famous couplet:*

> ***"Whatever the nature of a thing,***
> ***To know its true nature is wisdom." - Thirukkural 355***

*Throughout history, Indian thinkers have been relentlessly seeking knowledge about the self, the universe, and the ultimate reality. These endeavors have given rise to various philosophical systems collectively known as Indian philosophy. Traditionally, Indian philosophies have been categorized into two broad groups: Vedic and non-Vedic. Vedic philosophies, which include Samkhya, Yoga, Nyaya, Vaisheshika, Purva Mimamsa, and Uttara Mimamsa (Vedanta), are based on the Vedas. Non-Vedic philosophies, on the other hand, are diverse and include Charvaka, Jainism, Buddhism, and various other schools. While this categorization is a later development, it has been a dominant framework for understanding the history of Indian philosophy.*

*A noteworthy aspect of Indian philosophy is its emphasis on practical living. For instance, the ascetic philosophy of Ajivika, which is considered one of the oldest philosophies in the world, influenced later religions. Though there are no extant Ajivika texts, references in other ancient texts suggest that Ajivikas believed in seven eternal categories: earth, water, fire, air, pleasure, pain, and life. The influence of Ajivika, Jainism, and Buddhism can be traced in later Vedic philosophies such as Samkhya and Yoga.*

***Keywords:*** *Philosophy, Blessings, Vedas, Scholars*

***Reference***

1. *Basham. A. L. History and Doctrines ofthe Ajivikas, london, 1951.*

# "இந்தியத் தத்துவத்தில் ஆசீவகம்"

*முனைவர் சு. சிவகாமசுந்தரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி ( தன்னாட்சி), ஏனாத்தூர், காஞ்சிபுரம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்தியத் தத்துவம் என்பது இந்தியத் திருநாட்டில் இந்திய அறிஞர்களாலும் ஞானிகளாலும் உருவாக்கப்பட்ட மெய்ப்பொருளியலைச் சாரும். இந்தியப் பண்பாட்டின் படைப்புகளில் தத்துவம் சிறப்பிடம் பெறுகிறது. மக்களின் நடைமுறை வாழ்வியல், அனுபவங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், மரபு வழி வந்த தரவுகள், அறிவியல், அழகியல், மனவியல், அறிவுத்திறம், சிந்தனைத் திறம் புலன்கடந்த காட்சிகள் ஆகியவற்றின் அடித்தளத்தின் மேல் இந்தியத் தத்துவம் என்னும் எழில் மாளிகை எழுப்பப் பெற்றுள்ளது. இம் மாளிகையின் உருவாக்கத்தில் காட்டில் உறைந்த முனிவர்கள் மட்டுமன்றி வீட்டில் நிறைந்த வாழ்வினை மேற்கொண்ட இலட்சிய இல்லறத்தார்களும் ஈடுபட்டுள்ளனர் என்பது வரலாறு உணர்த்தும் வாய்மையாகும். இந்திய நாட்டில் தெற்கு, வடக்கு, என்ற திசை வேறுபாடின்றி அறிவுப் பரிமாற்றம் நடைபெற்று வந்துள்ளது.*

*தத்துவம், ஆசீவகம், வேதங்கள், அறிஞர்கள்*

*தத்துவம் என்ற சொல் "அதன் தன்மை" எனப் பொருள்படும். "அது" என்ற சுட்டுச் சொல் சமயந்தோறும் வேறு வேறு பொருளைக் குறிக்கும். ஆதலின் பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக் களஞ்சியமாக அறிவுக் கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கியது. இச்சொல்லுக்கு இணையாக மெய்ப் பொருள், சமயக்கணக்கு என்ற குறியீடுகள் தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன. வள்ளுவப் பெருந்தகை, மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,*

***"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்பதறிவு"***

***(திருக்குறள் : 355 )***

*என்று தத்துவஞானம் தான் தலையாய அறிவு என்று புகட்டியிருத்தல் காணத்தக்கது. உலக வரலாற்றில் மனிதன் தன்னைப்பற்றியும் தான் வாழும் உலகைப் பற்றியும், அனைத்திற்கும் ஆதார ஆற்றலாக விளங்கும் முற்ற முடிந்த உண்மைப் பொருளைப்* (Absolute Reality) *பற்றியும் அறிந்து கொள்வதற்கும் இந்தியச் சிந்தனையாளர்கள்காலந்தோறும் மேற்கொண்ட முயற்சிகள் மெய்ப் பொருளியல் எனப்படும் தத்துவ தரிசனங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன. இந்தியத் தத்துவங்களை இருபிரிவாக பகுத்தாராய்ந்தனர். வேதத்தை ஒட்டியவை, என்றும் வேதத்திற்கு உடன்படாதவை என்று இருபெரும் பிரிவாகப் பாகுபாடு செய்தல் மரபு. இவற்றை முறையே ஆத்தீகத் தரிசனங்கள், நாத்தீகத் தரிசனங்கள் என்றும் கூறுவர். சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சம், உத்தரமீமாம்சம் எனப்படும் வேதாந்தம் என்பன ஆறும் வைதீகத் தத்துவங்கள் ஆகும்.* (vedic systems or Homogeneous systems) *உலகாயதம் பூதவாதம், சாருவாகம், ஆசீவகம், முவகைச் சமணம் திகம்பரம், சுவேதாம்பரம், யாபனியம், நால்வகைப் பௌத்தம் சௌத்திராந்திகம், வைபாடிகம் ஆகிய ஈனயானப் பிரிவுகள்; மாத்யமிகம், யோகாசாரம் ஆகிய மகாயானப் பிரிவுகள் என்பன அவைதிகத் தத்துவங்கள் ஆகும்.* (Non vedic systems or Heterogeneous systems). *இங்ஙனம் இந்தியத் தத்துவங்களை இருபெரும் பிரிவாகப் பாகுபடுத்தும் மரபு*

தத்துவ வரலாற்றில் மிகவும் பிற்காலத்தில் எழுந்ததாகத் தோன்றுகிறது.

ஆசீவகம் என்பது தமிழரின் மெய்யியல் கொள்கையும், துறவு வாழ்க்கையும் ஆகும். இது உலகின் மிக மூத்த மதமாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த மெய்யியலின் தாக்கம் இன்றும் அனைத்து மதங்களில் காணப்படுகின்றன. இந்த ஆசீவக மெய்யியல் பற்றிய நூல்கள் கிடைக்கவில்லை. ஆயினும் பௌத்தம், ஜைனம் போன்ற சமய அறிஞர்கள் எழுதிய இறைமறுப்பு நூல்களில் இருந்தும், பிற தொல்பொருளியல் நூல்களிலிருந்தும் ஆசீவகத் தத்துவங்கள் பற்றிய எண்ணற்ற குறிப்புகள் உள்ளன. ஆசீவகர் நிலம், நீர், தீ, வளி, இன்பம், துன்பம், உயிர் என்னும் ஏழும் தான் உலகாகக் காட்சி தரும் தத்துவங்கள் என்றனர். சாங்கியம், யோகம், நையாயிகம், முதலிய தத்துவங்களிலும் ஆசீவகம், சமணம், பௌத்தம் ஆகிய அவைதிகத் தத்துவங்களிலும் கூட இந்தியத் தத்துவங்கள் இடம் பெற்றிருப்பதை ஆங்காங்கே இவ் ஆய்வுக்கட்டுரை விளக்குகின்றது.

**முன்னுரை**

***ஆசீவகம் = ஆசு+ஈவு+அகம்***

ஆசு - பிழையற்ற செம்மையான தோல்வியேற்படுத்தாத கேட்ட பொழுதே தங்கு தடையின்றி மடையுடைந்த வெள்ளமென

***ஈவு - தீர்வு***

அகம் - தருமிடம் என்பதே ஆசீவகமாகும்.

இயல் : 1 இந்தியத் தத்துவங்களில் ஆசீவகத்தின்தனித்தன்மைகள்.

இயல் : 2 தமிழ் இலக்கியங்களில் ஆசீவகக் கூறுகள்

இயல் : 3 ஆசீவகத்தின் உட்பொருள் விளக்கம்

இயல்: 4 ஆசீவகரின் சோதிடப் புலமையும், ஆசீவக நூல்களின் பொருண்மையும்

இயல் : 5 ஆசீவகக் கொள்கைகள்

**இந்தியத் தத்துவங்களில் ஆசீவகத்தின் தனித் தன்மைகள்**

ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி மக்களின் சமயநெறி, வேதநெறி, வேதங்களைப் புறக்கணித்தநெறி என்று பழஞ்சமய நெறிகள் மூன்றாகப் பகுத்துரைக்கப்பட்டது. சிந்துநாகரிகம் மறைந்த பின் எழுந்த வேதநாகரிகத்தார் சிந்து சமயக் கருத்துக்களை மேற்கொண்டிருப்பது இயல்பாக இருந்தது. எனினும் தமக்கெனச் சில வேள்விகளையும் தெய்வங்களையும் வழிபாடுகளையும் அமைத்துக் கொண்ட வைதிக நெறியின் போக்கினை, உபநிடத நெறியினர் ஒரு புறமும், ஆசீவகம், சமணம், பௌத்தங்களைப் பின்பற்றுவோர் மறுபுறமும் கண்டனம் செய்தனர். கர்ம மார்க்கத்தை வற்புறுத்தும் வேதநெறி; உபநிடதநெறியோ ஞானமார்க்கத்தை வலியுறுத்தும். உபநிடதங்கள் ஆரியரல்லாதாரின் சிந்தனைகளைக் கொண்டவை. இது வினைக்கொள்கை, ஆரியர்க்கு முற்பட்டது என்றும் டாக்டர் அ.ஃ.பாஷம் அவர்கள் ஆராய்ந்துள்ளார்.

உபநிடதங்கள் வேதங்களின் சாரமாய் முடிந்த முடிபாய் அமைந்தவை எனக் கருதப் பெறுதலின், ஆசீவகம் முதலிய மூன்றுமே வைதிகத்தை முழுமையாகப் புறக்கணித்த புரட்சி நெறிகள் என கூறமுடிகிறது. இம்மூன்று சமயங்களுக்கும் சில பொதுத் தன்மைகள் உண்டு. இம்மூன்றுமே,

1. வேத வேள்விகளையும், வருணாசிரமங்களையும், பல கடவுள் வழிபாட்டையும் மறுத்தன.
2. உபநிடதங்கள் உரைக்கும் ஒரு கடவுளுண்மை வாதத்தையும் உடன்படவில்லை.
3. வேதங்கள் விளம்பும் இயற்கைச் சக்திகளுக்கும் உபநிடதங்கள் உரைக்கும் பரம்பொருளுக்கும் பதிலாக அண்ட அமைப்பியல் நியதிகளை வரையறுத்தன.
4. இயற்கை இறந்த ஆற்றல்களைப் புறக்கணித்தன.
5. அண்டத்தின் இயற்கை விதியின் ஆட்சியை மதித்தன.

மற்கலி, மகாவீரர், புத்தர் மூவருமே தம்மை 24 - வது அல்லது 25 - வது தீர்த்தங்கரர் அல்லது புத்தர் எனக் கூறிக் கொண்டனர். ஏறக்குறைய இந்தியாவில் இம்மூன்று நெறிகளும் தோன்றிய காலத்தில் ஐயோனியாவில் (கிரேக்க நாட்டில்) எழுந்த இயற்கை மெய்ப்பொருளியலாளரின் கொள்கைகளுடன் இவை பெரும்பகுதி ஒத்தியங்குதல் குறிப்பிடத்தக்கது.

ஆசீவகம், சமணம், பௌத்தம் என்ற அவைதிக நெறிகள் மூன்றிலும் பொதுத் தன்மைகள் பொருந்தியிருத்தல் போலவே, தனித்தன்மைகளும் விளங்குதல் நோக்கத்தக்கது. மற்கலி, மகாவீரர், புத்தர் மூவரையும் இம்மூன்று நெறிகளின் முதல்வர்களாக மொழிதல் உண்டு. மற்ற மதங்களைப் போலவே, ஆசீவகம் இந்திய சமுதாயத்தின் கணிசமான பகுதியின் ஆன்மீகத் தேவைகளை ஓரளவு நிறைவேற்றியது எனலாம்.

ஆசீவகர்களின் தத்துவத்தில் முக்கியமானவற்றில் ஒன்று அவிசலித நித்தியத்துவம் அல்லது மெய்மையின் மாறாத்தன்மை கோட்பாடு அதன்படி ஆசீவகத்தில் அணுக்களையும் அவை தொடர்பான மூலப்பொருட்களையும் பற்றிக் குறிப்பிடும் போது அவை நிரந்தர மானவை என்று கூறுகின்றனர்.

இதனை நீலகேசியில்

**'எப்பாலும் தான்கெடா இவ்வளவும் தோன்றாசு (696)**
**'இல்லாது தோன்றா கெடாஉள் எனசு (698)**

அடிப்படை அணுக்கள் மாற்றம் அடைதலின்றி என்றும் நிலை பெற்றிருக்கும் என்பது பொருள். இதனை "உள்ளது கெடாது இல்லது தோன்றாது" என்றுரைக்கின்றனர் ஆசீவகவாதி.

ஆசீவகத்தைப் பற்றி மணிமேகலையில் சமயக் கணக்கர் - திறம் கேட்ட காதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**"ஆதி யில்லாப் பரமா ணுக்கள் தீதுற் றியாவதுஞ் சிதைவது செய்யா" (126)**

என்று கூறுகின்றனர். அதன் பொருள் தொடக்கமில்லாத, அடிப்படையான அணுக்கள், சிறிதுங் கெட்டு அழியாதவை என்பதாகும்.

தற்போதைய வான் இயற்பியல் விஞ்ஞானிகள் கருத்துப்படி இன்று உலகத்தில் இருக்கும் பொருட்கள் யாவும் (மனிதன், விலங்கு, தாவரம், அண்டம் என அதிலும் இருக்கும் அடிப்படைப் பொருட்கள்) பெரு வெடிப்பின் முதலில் காலம் தோன்றிய போது தோன்றிய பொருட்கள்தான். இடையில் புதிய அடிப்படை பொருள்கள் தோன்றவோ அழியவோ இல்லை என்கிறார்கள் அவை அழிவின்றி மாற்றமடைகிறது என்கிறார்கள்.

(According to most astrophysicists, all the matter found in the universe today & including the matter in people, plants, animals, the earth, stars, and galaxies && was created at the very first moment of time, thought to be about 13 billion years ago.)

அவிசலித நித்யத்துவம் தத்துவத்தையும், தற்போதைய வானியல் தத்துவத்தையும் ஒப்பீடு செய்யலாம். அவிசலித தத்துவம் என்பது மாற்றம் இன்மையினைக் குறிக்கும். நித்தியத்துவம் என்பது நிலைபேற்றினைச் சுட்டும். இதனை ("unchanging permanence") என்று மொழிபெயர்ப்பர் ஏ.எல்.பாஷம். எனவே, அவிசலித நித்யத்துவம் என்பது ஐவகைப் பொருள்களுக்கும் அடிப்படையாகக் கூறப்பெற்ற ஐவகைப் பொருள்களுக்கும் அடிப்படையாகக் கூறப்பெற்ற ஐவகை அணுக்களும் மாற்றமின்றி என்றும் நிலை பெற்றிருத்தலைப் புலப்படுத்தும். எனவே தான் 'உள்ளது கெடாது இல்லது தோன்றாது' என்று ஆசீவகவாதி எடுத்துரைக்கின்றார். இதனைப் பொருள்களின் சுபாவம் (Intrinsic nature) என்று ஆசீவகர் எண்ணினர். இதனை நீலகேசியில் "நுண்பொருள் ஐந்து இயல்பானவை" (671) என வரும் பகுதியில் இயல்பு என்ற தனித் தமிழ்ச் சொல்லினால் குறித்தல் காணத்தக்கது.

ஆசீவகரின் அவிசலித நித்யத்துவக் கோட்பாடு ஒருவகையில் சாங்கியர் கூறும் "உள்ளது போகாது இல்லது வாராது" என்னும் சற்காரிய வாதக்கோட்பாட்டுடன் ஒருங்கு வைத்து எண்ணத்தக்கது. சாங்கியரின் இக்கொள்கை சைவ சித்தாந்தத்திலும் இடம் பெற்றது.

நீலகேசியில் சாங்கிய வாதச் சருக்கத்தில் "நித்தியம் ஆய பொருள்நின ஆதலின்" (776) எனக் கூறப்பெறும் சாங்கியக் கருத்தினை "நின்பட்சத்தால் (பட்சம் - கொள்கை) வஸ்து அவிசலித நித்தியம் ஆதலின்சு என்று சமய திவாகரர் விளக்கியுள்ளார்.

## தமிழ் இலக்கியங்களில் ஆசீவகக் கூறுகள்

மணிமேகலையில், சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் "ஆசீவக நூல்" "மற்கலி நூல்" எனக் குறிக்கப் பெறுகின்றன. ஆய்வுப் பேரறிஞர்கள் கருத்துக்களை நுணுகிநோக்குவார், சிவன், உமை, திருமால் வழிபாடும், ஆகம நெறியும் தமிழர்கட்குச் சிறப்புரிமையுடையவை என்னும் உண்மையினை எளிதில் உணர்வர். சாங்கியம், யோகம், நையாயிகம் முதலிய தத்துவங்களிலும் ஆசீவகம், சமணம், பௌத்தம் ஆகிய அவைதிகத் தத்துவங்களிலும் கூட தமிழ்க் கூறுகள் இடம் பெற்றிருத்தல் ஆங்காங்குச் சுட்டப் பெற்றுள்ளது.

இந்நூல் வெறும் நிமித்த நூலாக இல்லாமல் அண்ட அமைப்பும், அணுக்கொள்கையும், உய்யும் வழியும் உரைக்கும் ஆசீவகக் கொள்கை நூலாக அமைந்திருத்தல் வேண்டும். என்பது மணிமேகலைப் பகுதியால் அறியலாம். (27 : 108 - 165)

தருக்க நூலாக எண்ணப் பெறும் நீலகேசியில் (கி.பி. 900) பௌத்த நெறியினரைச் சமண நோக்கில் மறுத்த பின்னர், ஆசீவகவாதம் அமைகிறது. எழுபத்தொரு பாடல்களில் ஆசீவகக் கருத்துக்களும் சமண நெறி விடுக்கும் மறுப்புக்களும் பிறவும் இடம் பெற்றுள்ளன.

நீலகேசி ஆசிரியர், "ஒன்பதுகதிர்" (பா.671) என ஆசீவக நூலினைக் குறித்தனர். அணுத்திரளால் அமைந்த அண்டத்தியல்பு, அண்ணல், பொருள், நிகழ்வு என்ற நான்கும் இந்நூற் பொருளாகக் காணப்படுகின்றது. மோன வடிவமான மற்கலியார் சொல்லப் பெற்ற இந்நூல் ஒக்கலி, ஒகலி என்ற இருவராலும் மக்களிடையே பரவியது என்பர்.

சிவஞானசித்தியார் பரபக்கத்தில் நிகண்ட நெறியாகிய சமண நெறியை மறுத்துரைத்த பின்னர் அருணந்திசிவனார் ஆசீவகன் நெறியைப் பத்துப் பாடல்களிலும் மறுப்பினை ஆறு பாடல்களிலும் படைத்துள்ளார்.

சமண சூத்திரம் சாற்றும் ஆசீவகச் சமய நூல் கருத்துக்களும் தமிழ் நூல்கள் கூறுவனவும் பெருமளவில் வேறுபடுகின்றன. பகவதி சூத்திரமும், தானாங்க சூத்திரமும் ஆகிய சமண நூல்கள் குறிப்பிடும் மகாநிமித்த நூல், இருமார்க்க நூல்களுக்குப் பதில் மற்கலிநூல், ஒன்பதுகதிர் என்பன முறையே தமிழ்ப் பௌத்த நூலாகிய மணிமேகலையிலும், தமிழ்ச் சமண நூலாகிய நீலகேசியிலும் கூறப்பட்டுள்ளன. மகாயான பௌத்தர்கள் புது நூல்களைப் படைத்துக் கொண்டது போல் தமிழகத்தில் வாழ்ந்த ஆசீவகர்களின் புதிய படைப்புக்களாக இவ்விரு நூல்களையும் மதிக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

## ஆசீவகத்தின் நாற் கூறுகள்

**1. ஆப்தன் (- ஆத்தன்**, lit. Trust worthy person)

ஆசீவகத்தினை நிறுவியவர் மற்கலி (671). இவர் மற்கலியார் என்றும் சுட்டப்பெற்றார் (681). இவரை ஆத்தன் (670,683) என்றும் இறை (671), இறைவன் (672), முற்ற அறிந்தனன் (685), பூரணன் (673) என்றும் காப்பியம் சுட்டுகின்றது. மணிமேகலையிலும் "ஆசீவகநூல் அறிந்த பூரணன்" (27:108) என்று இப்பெயர் காணப்படுகின்றது. முழுதும் உணர்ந்தவராகிய மற்கலியார் ஆன்றவிந்து அடங்கியவர், வாய் வாளாது செறிவுற்றவர். அசைவற்றவர், மோனத்து இருப்பவர், பேச்சிலர், உணவும் இலர் (-உண்ணா நோன்பினர்); நரை, திரை, இலர், ஆகாயத்தில் தோன்றும் வானவில்லைப் போலும் தோற்றம் உடையவர், குற்றமற்ற அறிவினர் (673).

இங்ஙனம் ஆசீவக முதல்வர் பற்றிய குணச்சித்திரம் காணப்படுகின்றது. தவ யோக வலிமையால் அடையும் அற்புத ஆற்றல்களில் வானவில் போன்ற தோற்றம் பெறுதலும்

*ஒன்றாகும். பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலையில் மணிமேகலா தெய்வம்,*

***"உருவு கொண்ட மின்னே போலத்***
***திருவில் இட்டுத் திகழ்தரு மேனியன்"*** *(6:9-10)*

*என்று போற்றப்படுதல் இங்கு சுட்டத் தக்கது. இத்தகைய சித்தியினைத் தாந்திரீக முதிர்ச்சி பெற்ற ஞானியர் பெற்றனர் என்பதற்கு நாகார்ச்சுனர்* II *சிறந்த சான்றாவர்.* (Vide, Alice Getty, The goods of Northern Buddhism, 1928, p.175) *சமய சாதனைகளால் பூத உடலை ஒளி உடலாக மாற்றிக் கொண்ட சித்தர், ஞானியருள் வடலூர் வள்ளலார் அண்மைக்காலத்துச் சான்றாகத் திகழ்பவர்.*

## 2. ஆசீவகத்தின் மூல நூல்

*நீலகேசியில், "ஒன்பதுவாம் கதிர் நூல்யாம் உடையன" என்று ஆசீவகரின் மூலநூல் குறிக்கப்படுதல் காணலாம். சமயதிவாகரரும் "ஒன்பது கதிர் எமக்கு நூல்" என்று விளக்கினர். "யாம் உடையன" எனப் பன்மையாற் கூறியதால் ஒன்பது கதிர் ஒரு நூலன்று; ஒவ்வொரு கதிரும் ஒரு நூலாகத் தோன்றுகின்றது. எனின் 674ஆம் பாடலுரையில் "நவகதிர்" என்றும் இந்நூலினைக் குறித்துள்ளார். மணிமேகலையில் பொதுநிலையில் சுட்டப் பெறும் "ஆசீவகநூல்" (27:108), "மற்கலிநூல்" (27:) என்ற குறியீடு ஒன்பது கதிரைக் குறிப்பதா? வேறு நூலைக் குறிப்பதா? என்பதைத் திட்டவட்டமாகக் கூறுதற்கு இல்லை. சிவஞானசித்தியாரில், "வரம்பினை அறிவன் ஆதி வைத்த நூல்" (பர. 166) என்று ஆசீவகத்தின் ஆதி நூல் (- முதல் நூல்) குறிக்கப்பெற்றது. சமணம், பௌத்தம் போன்ற அவைதிகத் தத்துவங்களுக்குரிய ஆதி நூல்கள் ஓரளவேனும் கிடைத்தல் போல, ஆசீவகம், உலகாயதம் ஆகிய அவைதிக தரிசனங்களுக்குரிய மூல நூல்களில் ஒன்றேனும் இது வரையும் கிடைக்கவில்லை என்பதால், இவை எந்த அளவு மாற்றுச் சமயக் கணக்கர் தம் சீற்றத்திற்கும், சிதைவுக்கும் ஆளாயின என்பது உய்த்துணரத் தக்கது.*

## 3. ஆசீவகம் நுதலும் பொருள்வகை ஐவகைப் பொருள்கள்

*ஆசீவகர்கள் காட்சிப் பொருள் உண்மைவாதிகள்* (Realists). *உலகில் காணப்படும் எவ்வகைப் பொருள்களையும் அணுச்செறிவால் ஆனவை என்றும், அவை ஐவகைப் படும் என்றும் கண்டனர். அவை "முன் பொருள் ஐந்து" (671), அணு ஐந்து (674) எனச் சுட்டப்படும். நுண் பொருள் எனினும் அணு எனினும் ஒன்று தான். இவ்வணுக்கள் அதிசூக்குமம் ஆனவை* (very subtle atoms) *என்று சமயதிவாகரர் உரையில் குறித்துள்ளார். இவை பிறரால் அழிக்க முடியாதவை (678), எனவே, நிலைபேறுடையவையாகும். நிலவணு, நீரணு, தீயணு, காற்றணு என்ற நால்வகைப் பூதங்களும் உயிரணு என்னும் அறிவுடைப் பொருளும் ஆகப் பொருள்கள் ஐந்துமே என்றும் உள்ளவை என்பது ஆசீவகக் கோட்பாடு. ஆகாயம் ஆசீவகர்க்கு உடன்பாடில்லை; எனவே பொருள் வரிசையில் சுட்டப்படவில்லை. உலகாயதருள் ஒரு சாராரும் சமணரும் பௌத்தரும் ஆகாயம் நீங்கலாக நான்கு பூதங்களையே எண்ணினர் என்பதால், இந்நான்கு நாத்திகத் தத்துவங்களுக்கும் இடையே காணப்படும் பொதுக் கொள்கைகளில் நாற்பூதக் கோட்பாடும் ஒன்றாகும் எனலாம்.*

## 4. பொருள்களின் நிகழ்ச்சி

*அணுத்திரளாகிய நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்னும் ஐந்து பொருள்களும் குணம் உடையன அல்ல. இவ்வணுக்கள் தம்முட்கூடும்; பிரிதலும் செய்யும். ஒன்றில் ஒன்று மேவியிருப்பினும், ஒன்றனுள் ஒன்று உள்புகுதல் உடையன என்று ஆசீவகர் கூறமாட்டார்.*

*ஆசீவகர் குணத்தையும், குணியையும் ஒன்றாகவே கொண்டனர். பச்சை என்பது குணம். அக்குணத்தை உடையது மரகதமணி. பொருளாகிய மரகதத்தைத் தவிர்த்துக் குணமாகிய பச்சையைத் தனியே பிரித்துக் காட்டுதல் இயலாது. எனவே, பொருளை மட்டும் (-குணியை) ஒரு தத்துவப் பொருளாகக்*

கொள்ளாமையின், ''குணமே இலவாம்'' எனக் குறித்தனர். ஆசீவகர் இவ்விரண்டையும் பொருளினின்றும் பிரித்தெடுத்துத் தனித்தனி திரவியங்களாக எண்ணவில்லை என்பது சிறப்பாகச் சுட்டத்தக்கது.

### ஆசீவகத்தின் உட்பொருள் விளக்கம்

பாலி பிடக நூல்களிலும், சமண சூத்திர நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் முறையே புத்தர், மகாவீரருடன் தொடர்பு கொண்டவராகவே மக்கலி கோசாலர் குறிக்கப்பெறுகிறார். இந்நூல்களில் ஆசீவகம் பற்றிய குறிப்புக்கள் நிரம்ப உள்ளன.

பாலி, பாகதம், சிங்களம், தமிழ் ஆகிய நான்கு மொழி நூல்களிலும் ஆசீவகம் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆசீவகம் என்ற சொல்லின் பொருளை ஆராய்த்த அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைப் பகர்ந்துள்ளனர்.

1. நீலகேசியில், தொழில் பல செய்து உயிர் வாழ்பவன் என்ற கருத்தில்'' அருகிருந்தார் தாம் அறிய ஆசீவகனை'' (687) என்ற தொடர் காணப்படுகிறது. சமயதிவாகரர் ஆசீவகன் - ஜீவிக்கின்றவன் எனப் பொருள் செய்துள்ளார்.
2. பர்னோஃவ் (Burnouf) என்பார், ஜீவ - வாழ்க்கை, அ - ஜீவ - வாழ்வின்மை, ஆதலின் பிறர் தயவில் (ஐயமேற்று) வாழும் துறவி எனப் பொருள் கண்டார்.
3. லேசன் என்பார் (Lassen) ஜீவனை உண்ணாதார் (புலால் மறுத்தவர்) அஜீவகர் எனப் பொருளுரைத்தார்.
4. ஹார்ன்லே (Hoernle) என்பார் ''ஆசீவ'' என்ற சொல் வாழும் முறை - இல்லத்தாராயினும் துறவறத்தாராயினும் பின்பற்றும் வாழ்க்கை முறையினை உரைக்கும் நெறி என்று விளக்கம் கண்டனர்.

### ஆசீவகரின் சோதிடப் புலமையும், ஆசீவக நூல்களின் பொருண்மையும்

இந்து, சமண, பௌத்தசமயங்களுக்கென வரையறுத்த நூல்கள் பல கிடைத்தல் போல ஆசீவக சமய நூல்கள் ஒன்றும் இப்பொழுது முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆயினும் இச்சமயத்தவரை வெறுத்து நோக்கும் பகைச் சமய நூல்களில் காணப்படும் குறிப்புக்களால் ஆசீவகத்திற்கென வரையறுத்த கொள்கையும், தத்துவ நூல்களும், தருக்கமும் கூட இருந்தன என்ற உண்மை தெளிவாகிறது. பகவதி சூத்திரம் என்ற சமணநூல், திசாசரர் அறுவர் நூற்றுக்கணக்கான கொள்கைகளைத் துருவி ஆராய்ந்து புவ்வங்களினின்றும் எண்வகை மகா நிமித்தங்களைப் பிழிந்தெடுத்தனர் என்றும் இவ்வெட்டுடன் மார்க்கம் இரண்டும் சேர்த்துப் பத்தாக்கினர் என்றும், இவை மற்கலியால் எண்ணி ஏற்றுக் கொள்ளப்பெற்றன என்றும் இயம்புகிறது. இச்சூத்திரத்திற்கு உரை வகுத்த அபயதேவர் என்னும் அறிஞர் மகாநிமித்தங்கள் எட்டினையும்,

1. திவ்வியம் ( தெய்வம் பற்றியன)
2. ஔத்பாதம் (அற்புதம் பற்றியன)
3. ஆந்தரிக்ஷம் (வான் பற்றியன)
4. பௌமம் (பூமி பற்றியன)
5. அங்கம் (உடல் உறுப்புக்கள் பற்றியன)
6. சுவாரம் (ஓசை பற்றியன)
7. இலக்கணம் ( இயல்புகள் பற்றியன)
8. வியஞ்சனம் (குறிப்புக்கள் பற்றியன)

என்று விளக்கியுள்ளார். இவ்வெட்டும் தானாங்க சூத்திரம் என்னும் சமண நூலிலும் கூறப்பட்டன. ஆயினும் முதல் நிமித்தத்திற்குப் பதிலாகக் கனவுகள் பற்றிய நிமித்தம் இந்நூலில் கூறப்பட்டது. இவ்வெட்டு நிமித்தங்களும் வருவதுரைக்கப் பயன்படுவன என்று அபயதேவர் என்ற சமணச் சான்றோர் தெளிவுறுத்தியுள்ளார். ஆதலின் ஆசீவகர்கள் சிறந்த சோதிடப் புலமை வாய்ந்த கணியர்கள் என்பது புலனாகும்.

உத்தராத்தியாயன சூத்திரமும் இவ்வெண்வகை நிமித்தங்களை எடுத்துரைத்துச் சமணத் துறவி இவற்றைப் பயன்படுத்தி வாழக்கூடாது என்று எச்சரிக்கையும் செய்கிறது. பஞ்சகல்ப சூரணீ என்னும் சமண நூலில் காலகன் என்னும் சமணத் துறவி ஆசீவகரிடமிருந்து மகா

*நிமித்தங்களைக் கற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.*

*பௌத்தர்களுக்குரிய நக்கந்த சாதகக் கதையிலும் ஆசீவகரின் சோதிடப் புலமை சுட்டப்பட்டது. ஆசீவகத் துறவி ஒருவர் பிம்பிசாரன் அவைக்குச் சென்று அவன் பேரன் அசோகன் சீரும் சிறப்பும் எய்தித் திகழ்வான் என முன்னரே மொழிந்த திறனைத் திவ்வியாவதானம், மகாவமிசம் முதலிய பௌத்த நூல்கள் பகர்கின்றன. மகாகாசிபர் தேரர் ஐந்நூற்றுவர் புடைசூழக் குசிநகரம் நோக்கிச் செல்லும் வழியில், அந்நகரினின்றும் போந்த ஆசீவகன் ஒருவன் கையில் மந்தாரை மலர் தாங்கியிருத்தலைக் கண்டு, இம்மலர் தேவருலகிற்கு உரியது; இந்நிமித்தம் நன்று என்று எண்ணித் தங்கள் தலைவராம் புத்தர்க்கு உற்றதை உரைப்பாய் என ஆசீவகனை வினவினர். அவனும், ஏழுநாள் முன்னர்ப் புத்தர்பிரான் பரிநிர்வாணம் ஆகிய பேரின்பப்பேறு எய்திய நிகழ்ச்சியை எடுத்தியம்பினான். இச் செய்தி விநயபிடகத்தில் உள்ளது.*

*உத்திராத்தியாயனநூல் தடைவிதித்தும் கூட, சமணர்கள் ஆசீவகர்க்குரிய மகாநிமித்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தனர் என்பதைக் காலகன், பத்திரபாகு முதலிய சமணப் பெரியாரின் நிமித்தப்புலமையால் அறிகிறோம். தென் நாட்டில் சமணம் பரவுதற்குக் காரணமாயிருந்த பத்திரபாகு மகாநிமித்தங்களைத் தெளிவாக அறிந்து முக்காலமும் உணர்ந்திருந்ததால் தான், உச்சயினி நகரில் பன்னீராண்டு பஞ்சம் ஏற்படும் என்பதை முன்னரே அறிவித்தார் என்று சமண நூல்கள் சாற்றுகின்றன. சங்க இலக்கியங்களில் மிகச் சிறந்த பாடல்களில் ஒன்றாக மதிக்கப்படும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் (192) பாடலை யாத்த கணியன்பூங்குன்றனார் ஆசீவகர்க்குரிய நியதிக் கொள்கையினை விளங்க உரைத்த சோதிடப் பெரும்புலவர் என்பதை மறத்தற்கு இல்லை. சமணம், ஆசீவகம், பௌத்தம் மூன்றுமே தமிழகத்தில் ஏறத்தாழ ஒரே காலத்தில் வந்தன எனலாம். போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோர் தமிழகத்திற்கு ஏறக்குறைய ஒரே காலத்தில் வந்தனர் என்ற அண்மைக்கால உண்மையை ஒப்பிடுதல் தக்கது. மாநிமித்தங்களை அடிப்படையாகக் கொண்டு அருந்தமிழில் வெண்பா யாப்பில் பாடப் பெற்ற சினேந்திர மாலை என்ற ஆசீவக சமணச் சோதிட நூலின் சிறப்பினை அறிந்தார் அறிவர். ஆதலின், ஆசீவக நூல்களில் பல நிமித்தங்களைப் பற்றியன என்று அறிஞர்கள் கருதுதல் தக்கதே. பொறி புலன்களை அடக்கி, உள்ளத்தினை ஒருவழிப்படுத்தித் தியானப் பயிற்சி மேற்கொண்டமையின் வருவதுரைத்தல், கடந்தமை கழறுதல், நினைந்தது கூறுதல் முதலிய அற்புத ஆற்றல்களை ஆசீவகர் பெற்றிருந்தனர்.*

*ஆசீவகத்தில் மார்க்கங்கள் பற்றிய பனுவல்களும் பண்டு வழங்கியதாக வேண்டும். ஆசீவகச் சபையில் மக்கள் முன்பாகச் சமய நிகழ்ச்சிகளில் ஆடல் பாடல்கள் இடம்பெற்றன என்பதையும் மறத்தற்கில்லை. இங்கு கூறிய நிமித்தமும் ஆடல் பாடல் ஆகிய மார்க்கமும் புவ்வங்களினின்றும் ஆசீவகரால் தேர்ந்தெடுக்கப்பட்டவை எனப் பகவதி சூத்திரம் பகர்வதால் சமணம், ஆசீவகம் இரண்டிற்குமே புவ்வங்கள் (பூர்வ நூல்கள்) பொதுவாகும் என்றும், பின்னர் அவை சமணர்க்குச் சிறப்பாயின என்றும் அறியலாம். சைவ நெறியிலும் ஆடல், பாடல் நெறிகள் சிறப்பிடம் பெற்று, இறைவனை ஆடல்வல்லானாகவும் அவனை அடையப் பாடல் நெறி பாங்குடையது என்றும் சைவர்கள் கருதுதல் இங்கு எண்ணத்தக்கது.*

**ஆசீவகக் கொள்கைகள்**

1. *நியதிக் கொள்கை*
2. *சுபாவக் கொள்கை என்ற இரு கொள்கைகள் ஆசீவகத்தில் இருந்தன.*

**நியதிக் கொள்கை**

*தன்னிச்சைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களால் செயல் தீர்மானிக்கப்படுகிறது என்ற கருத்தில்*

*ஆசீவகர் நியதிக் கொள்கையினைப் பின்பற்றினர். இந்தியாவில் தோன்றிய உலோகாயதம் தவிர எல்லாச் சமயங்களும் ஒருவனின் இன்ப துன்பங்களை அவன் முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ புரிந்த நல்வினை தீவினைகள் முடிவுகட்டுகின்றன என வினைக் கொள்கையினை* (Doctrine of Karma) *விளம்புகின்றன. ஆனால், ஆசீவகத்தை உருவாக்கிய மற்கலி கோசாலர் வினைகள் மனிதனின் இன்ப துன்பத்தை ஆக்கவில்லை என்றும், ஒத்த ஆற்றலுடைய இருவர் புரியும் ஒரே வினை ஒருவர்க்கு இன்பமும் இன்னொருவர்க்குத் துன்பமும் தருதலின் வினைகள் பயன்தரவில்லை என்றும், நியதிப்படி தான் இவை விளைகின்றன என்றும், உலகநிகழ்ச்சிகள் அனைத்தும் நியதியின் ஆற்றலால் நடைபெறுகின்றன என்றும் கருதினர். எவ்வளவு முயன்றாலும் உருவாதலைப் போக்கவோ, இலவாதலை ஆக்கவோ இயலாது ; எந்தச் செயலும் வினைகளால் தீர்மானிக்கப்படவில்லை ; நியதியால்தான் முடிவுகட்டப்படுகின்றது ; ஆதலின் மனித முயற்சிகள் பயனற்றவை. வலியார், மெலியார் அனைவருமே நியதிக்கும் அதன் வெளிப்பாடாகிய எதேச்சை* (chance), *சுபாவங்களுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டவர்கள். நியதி வெளிப்படுமிடத்து எதேச்சையாகவும், சுபாவமாகவும் தோன்றும், இக்கொள்கையினைப் பிடக நூலின் பகுதியாகிய சாமஞ்ஞபல சுத்தத்தில் காண முடிகிறது. பிற்காலத்து ஆசீவகர் உருவாக்கிய சுபாவக் கொள்கைக்கு இங்குத் தான் அடிப்படையைக் காண முடிகின்றது. ஆசீவகத்தின் நெறிப்படி எண்பத்து நான்கு இலட்சம் கற்பங்களுக்குரிய பல்வகைப் பிறப்புக்களும் நன்மை, தீமை ஆகிய பிறவிகளில் பலமுறைகள் சுழன்று, இக்கால அளவின் முடிவில் தான் விடுதலை பெறும். திரண்டுள்ள நூல்பந்தினை விசிறி எறிந்தால் முடக்கம் நீங்கி முழுதுமாய் நீண்ட முனலவிடுபடுதல்போல, பேதையர், மேதையர் என்ற பேதம் இன்றி மேற்குறித்த கால முடிவில் துக்கத்தினின்றும் கட்டாயம் விடுதலை பெற்றேயாதல் வேண்டும். ஆதலின் ஆசீவகம் எல்லா உயிர்களும் ஒரு கால எல்லை வரையில் நன்மை, தீமைகளைக் கட்டாயம் அனுபவித்துப் பின்னர் வேறுபாடின்றி ஒரு குறிப்பிட்ட கால முடிவில் விடுதலை அடையும் என்ற பரந்த நியதிக் கொள்கையினைத் தெளிவுறுத்துகின்றது. நீலகேசியில் இடம்பெறும் ஆசீவக வாதத்தில் இக்கொள்கை சிறப்பிடம் பெற்றுள்ளது.*

*நியதிக் கொள்கையும், வினைக்கொள்கையும் வேறு வேறு என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விரண்டு கொள்கைகளுமே வேதங்களில் காணப்படவில்லை. ஆதலின், இவை ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியாவில் வாழ்ந்த திராவிடப் பெருமக்களுக்கு உரியன என்று மேலைநாட்டு இந்தியச் சிந்தனையாளர்கள்* (Indologists) *ஆய்ந்துரைத்துள்ளனர். ஆசீவகரின் நியதிக்கொள்கையின் நிழல் கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலில் (192) பொலிதல் காணமுடிகிறது.*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா***
***இன்னா தென்றலும் இலமே; மின்னொடு***
***வானம் தண்டுளி தலைஇ யானாது***
***கல்பொரு திரங்கும் மல்லற் பேர்யாற்று***
***நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்***
***முறைவழிப் படூஉம் என்பது திறவோர்***
***காட்சியிற் றெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்***
***பெரியோரை வியத்தலும் இலமே***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.***

*இப்பாடலில், ஓடும் வெள்ளத்துடன் ஒத்தோடும் மிதவையினை நியதிப்படி செயலாற்றும் உயிர்க்கு உவமையாகச் சொல்லப்பட்டிருத்தல் காணத்தக்கது. நியதியை, "முறை" என்ற அழகு தமிழால் சுட்டி சொல்லப்படுகின்றது. மனிதச் செயல்கள் நியதியால் முடிவு கட்டப்படுபவை என்பதும், நியதியை மீறியோ எதிர்த்தோ செல்லுதல் இயலாது என்பதும் இவ்வுமையால் கவிச்சுவை பெருகக் கணியன்பூங்குன்றனார் தெளிவுறுத்தியதை*

*அனைவரும் அறியமுடிகிறது. நியதிக் கொள்கை ஆரியர் வருகைக்கு முற்பட்டுத் திராவிடர்களால் பின்பற்றப்பட்டதென்று அறிஞர்கள் கருதுவதால் இத்தமிழ்க் கொள்கை அக்காலத்து ஆசீவகர்களால் கைக்கொள்ளப்பட்டது எனக் கருதுவது ஆய்வு நெறிக்கு ஒத்ததாக உள்ளது.*

**2. சுபாவக் கொள்கை**

*சமண சூத்திரங்களின் உரைநூல்களில் நியதிக் கொள்கையுடன் சுபாவக் கொள்கையும் ஆசீவகர்க்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. பிரசினவியாகரண உரையில், அண்டம் சுபாவத்தால் தோற்றுவிக்கப்பட்டது என்றும், ஒவ்வொன்றும் சுபாவம் ஒன்றினாலே வெளிப்படும் என்றும் ஆசீவகர் கருதினர் என்று ஞானவிமலர் நவின்றுள்ளார். சத்தர்சன சமுச்சய உரையாகிய தர்க்கரகசிய தீபிகையில், "முள்ளுக்குக் கூர்மையும், விலங்கு, பறவைகளில் வெவ்வேறு பண்புகளும் அமைத்தது யார்? எல்லாம் சுபாவத்தால் அமைந்தன; அதனாலே எல்லாம் செயல்படும். தன்னிச்சையால் செயல்படுவது ஒன்றுமில்லை. ஆதலின், முயற்சியால் என்ன பயன்?"*

*என ஆசீவகர் வினவுவதாகக் குணரத்தினர் என்ற சமணச் சான்றோர் கூறுவது பற்றி காணமுடிகின்றது.*

*ஆதலின், ஆசீவகத்தில் நியதிவாதம், சுபாவ வாதம் என்ற இரு கொள்கைகள் இருந்தன என்றும், இரண்டுமே மனித முயற்சிகள் பயனற்றவை என்று அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் அறிய முடிகின்றது. இதனால் ஆசீவகம் மனித முயற்சியைப் புறக்கணித்தது என்று கருதி விடுதல் கூடாது. மனிதன் தான் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புரிந்து கொண்டுதான் இருத்தல் வேண்டும்; ஆனால் அவையெல்லாம் இயல்பாய் நிகழ்வன என்று எண்ணுதல் வேண்டும் என்பதே ஆசீவகரின் முடிபாகும்.*

*நியதிவாதம் தனிமனிதன் தனக்குப்புறம்பே உள்ள நியதியின் ஆற்றலால் கட்டுப்படுத்தப் பெறுகிறான் என்றும், சுபாவவாதம் என்பது தனக்குள்ளே பொதிந்து கிடக்கும் சுபாவத்தால் தீர்மானிக்கப் பெறுகிறான் என்றும் இயம்பப் படுகிறது. இவ்விரண்டிற்கும் இவ்வளவே வேறுபாடு. சுபாவ வாதத்தினைத் தமிழ்ச் சமணக் காப்பியமாகிய சீவகசிந்தாமணி தழுவிக் கொண்டமை பற்றி அறிய முடிகின்றது.*

*உலக நிகழ்ச்சிகளுக்கு நியதியைத் தவிர வேறு காரணங்களை ஆசீவகர் ஒத்துக் கொள்ளாததால் அஹேதுகவாதியர் என்றும், மனிதச் செயல்கள் யாவும் பயனற்றவை என்றதால் அகிரியாவாதியர் என்றும் புறச் சமயங்களால் குறிக்கப்பெற்றனர்.*

**உய்யும் உபாயம்**

*பிறப்பு இறப்பினின்றும் உய்வதற்குரிய ஆசீவகமுறையினைச் சம்சார சுத்தி எனப் பாலி பிடக நூல் பகர்கிறது. உய்தி பெற குறுக்கு வழியில்லை. நியதிக்காகக் காத்திரு. ஒருவன் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும் நியதியால் கிடைப்பன. எல்லா உயிர்களும் மாறிப் பிறத்தலால் தூய்மை பெறுகின்றன. ஆதலின், வருவது குறித்து ஆவலுற வேண்டா என்பதே ஆசீவகரின் கொள்கையாகும்.*

**முடிவுரை**

*ஆசீவகம் என்ற சொல்லின் வேரினை கணக்கியல் வழி நின்று பார்த்தால் எட்டுக்குள் எத்தனை இரண்டுகள் உள்ளன என ஒருவர் அறிய விரும்புகிறார். வகுத்தல் முறையில் நான்கு எனக் கண்டு கொள்கிறார். எட்டு, இரண்டு என்பன அவரிடம் உள்ளவை. இவை முறையே முதலில் வகுத்தால் அவற்றைக் கொண்டு அவர் பெற்ற விடை நான்கு (4 x 2=8)*

*இதற்குப் பெயர் ஈவு. ஆக எந்த ஒரு அறிந்த செய்தியிலிருந்தும் அறியாமல் உள்ள விடையை அறிய முடிகிறது. அதற்குத்தான் ஈவு என்று பெயர். ஈவு என்பது வகுத்தும்,*

*பகுத்தும் பெறப்படுவது விடையாம். பண்டைக்கால மனிதன் வெள்ளந்தியாக வாழ்ந்த காலத்திலும் பல்வேறு ஈவுகள் தேவைப்பட்டன. அவனுக்கு அன்று ஈவு கொடுப்பதற்கு ஒரு இடம் இருந்தது. அதுவே ஆசீவகத் துறவிகளின் கற்படுக்கை. அங்குச் சென்று தனக்குத் தேவையான ஈவுகளைப் பெற்றதால் அத் துறவிகளின் கற்படுக்கை ஈவகம் (ஈவு+அகம்)எனப் பெயர் பெற்றது. எவ்வகைப் பிழையுமின்றிச் செம்மையாக ஈவு தந்ததால் ஆசு+ஈவகம்=ஆசீவகம் எனச் சிறப்பிக்கப்பட்டது. ஆதலின் ஆசீவகம்பற்றிக் குறிப்பிடும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ்க் காப்பியங்கள் ஆசீவகம் அறவே புறக்கணிக்கப்பட்ட கி.பி 7-ம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலத்து எழுதப்பெற்ற உண்மை தெளிவாகிறது.*

*இதுகாறும் இயம்பியவற்றால் ஆசீவகத்தின் தன்மைகள், தமிழ் இலக்கியங்களில் ஆசீவகக் கூறுகள், ஆசீவகக் கொள்கைகள் பாலி, பாகதம், வடமொழி, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் காலந்தோறும் எடுத்தோதப் பெற்றன என்பதும், இந்தியச் சிந்தனையாளர் வரிசையில் ஆசீவகர்க்கு அழியா இடம் உண்டென்பதும்; அவர்தம் சோதிடப் புலமையும், அணுக் கொள்கையும் ஆரியர் வருகைக்கு முன்னரே வடநாடு முழுவதும் பரவியிருந்த தமிழ்ப் பெருமக்களிடமிருந்து ஆசீவகர்களால் எடுத்துக் கொள்ளப் பெற்றவை என்பதும், பிறவும் வெள்ளிடை மலை போல் விளக்க முடிகின்றது.*

**பார்வை நூல்கள்**


1. *சோ.ந.கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 2003.*
2. *நீலகேசி, சக்கரவர்த்தி பதிப்பகம், கும்பகோணம், 1936.*
3. *புறநானூறு (பழைய உரையுடன்) சாமிநாதையர் பதிப்பு (7ஆம் பதிப்பு), சென்னை, 1971.*
4. *மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சென்னை, 1898.*
5. *Dr. ஏ. விஜயலட்சுமி, தமிழகத்தில் ஆசீவகர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.*